DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : வைரமுத்து | Father/Husband Name : தேவகிருபை |
| Age : 42 | Village : தாயில்பட்டி |
| Taluk : | Calling : பயர் ஆபிசில் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9 Apr 2026

(A1, A2 Charge abated other accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் தாயில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பயர் ஆபிசில் வேலை செய்து வருகிறேன். சாட்சி செல்வத்தை எனக்கு தெரியாது.

2. தேதி, மாதம் நினைவில்லை. 2019ம் ஆண்டு ஒரு நாள் எங்கள் ஊர் சமுதாயகூடம் அருகேயுள்ள பழனி என்பவரின் வீட்டில் வைத்து வெடி விபத்து ஏற்பட்டிருந்தது. அது தொடர்பாக விசாரிக்க வந்த போலீசார் என்னுடைய வீட்டில் வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து அல்ல. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை** –

3. 1வது எதிரி முருகேசன் மேற்படி பழனி என்பவரின் தந்தை என்றால் சரிதான். அவர் வீட்டில் வைத்து தான் வெடி விபத்து நடைபெற்றது என்றால் அவ்வாறு தான் கூறினார்கள். 04.04.2019 ம் தேதி இரவு 10.00 மணியளவில் இந்த வழக்கின் சம்பவ இடத்தை போலீசார் என் முன்னிலையிலும், செல்வம் என்பவர் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் சம்பவ இடத்திலிருந்து வெடி வெடித்து கருகிய நிலையிலிருந்த பொருட்களை கைப்பற்றினார்கள் என்றாலும், பார்வை மகஜரிலும், கைப்பற்றுதல் அத்தாட்சியலும் நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றாலும், நான் அந்த இடத்திற்கே செல்லவில்லை. இந்த வழக்கு எதிரிகள் எனக்கு தெரிந்த நபர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur.